பக்கங்கள்:-18

காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 16 | வியாழக்கிழமை | 01.08.2024 | அதிர்வு 365 |
|---|---|---|---|---|---|

# நாட்டைப் புதிய கோணத்தில் முன்னேற்றியே தீருவேன்!

## ஜனாதிபதி நேற்று சபதம்

பாரபட்சமின்றி நாட்டை புதிய கோணத்தில் முன்னோக்கிக் கொண்டு செல்லவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றேன் என்று தெரிவித்த ஜனாதிபதி 05▶



# ரணிலின் பெரு வெற்றிக்கு எம்மை அர்ப்பணிப்போம்!

## மொட்டு, ஐ.தே.கவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் உறுதி





“வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின்மாபெரும்வெற்றிக்குஎம்மை அர்ப்பணிக்கின்றோம்.” - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 116 மாகாண சபைகளின் முன்னாள் மக்கள் பிரதிநிதிகள் உறுதியளித்தனர். 06▶

# இன்னுமொரு தேர்தல் வந்தால் மொட்டு முற்றாக அழிந்துவிடும்!

## ஆரூடம் கூறுகின்றார் விக்கி



(எஸ்.நிதர்ஷன்)

“வரும்ஜனாதிபதித்தேர்தலில்மொட்டுக் கட்சியின் பங்கு என்னவென்று கேட்டீர்களானால் அந்தக் கட்சியில் இருப்பவர்கள் திரும்பவும் ஒரு தேர்தல் வந்தால் முழுமையாக அழிக்கப்பட்டு விடுவார்கள் என்றே கருதுகின்றேன்.”

– இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான 05▶




ஒரு விடயத்துக்காக மொட்டுக் கட்சித் தலைமையைப் பாராட்டலாம். அதிகாரத்தில் இருந்த போதிலும் சரி, அதிகாரத்தை இழந்திருக்கும் இந்த சமயத்திலும் கூட, ஒரு விவகாரத்தில் ஒரே நிலைப்பாட்டில் மாறாமல் இருக்கின்றார்கள் என்பதற்காக.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்தின் உச்சத்தில் இருந்த போது அவர், அவரது ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ போன்றோர் தங்கள் கட்சியின் வாசல் கதவு குறித்து ஒரு விடயத்தை சிலேடையாகக் கூறுவர். ‘கட்சியின் கதவு சலூன் கதவு போன்றது. கதவை உள்ளே தள்ளித் திறந்து கொண்டு உள்ளேயும் வரலாம். அல்லது 06▶



# மாணவன் மீது தாக்குதல்: மூவருக்கு விளக்கமறியல்!

(எம்.எப்.எம். அலி)

இரத்தினபுரி, நிவிதிகல நிரியெல்ல தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவனைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தோட்ட வெளிக்கள உத்தியோகத்தர் மற்றும் அவரது மனைவி உட்பட மூவரையும் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு இரத்தினபுரி மாவட்ட மேலதிக நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட மூவரும் இரத்தினபுரி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போதே விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.



# சஜித் முன்னிலையில்!

## ஞானசார தேரர் தகவல்

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவே முன்னிலையில் இருக்கின்றார் என்று பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமது அமைப்பு விரைவில் ஊடக சந்திப்பொன்றை நடத்தவுள்ளது என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கோட்டாபய ராஜபக்ஷ 69 இலட்சம் வாக்குகளைப் பெற்ற வேளைகூட சஜித்துக்கு 55 இலட்சம் வாக்குகள் கிடைக்கப் பெற்றன. சஜித்தால் தற்போது நடத்தப்படும் நிகழ்வுகளுக்குப் பெருந்திரளான மக்கள் வருகின்றனர். அவர் தன்னால் முடிந்தவற்றை வழங்குகின்றார். பஸ் இல்லாத பாடசாலைகளுக்குப் பஸ் வழங்கப்படுகின்றது. ஆனால், அதற்கான நிதி மூலம் பற்றி சிலர் கேள்வி எழுப்புகின்றனர். பஸ் இல்லாத பாடசாலையொன்றுக்கு அது கிடைக்கின்றதே எனச் சந்தோசப்பட வேண்டும்.

நான் குறைந்த பட்சம் இரு வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க விரும்புகின்றேன். ஏனெனில் நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி முக்கிய சில தகவல்களை வெளியிட வேண்டியுள்ளது." – என்றார்.

# தமிழ்ப் பொது வேட்பாளரை தெரிவு செய்வதில் சிக்கல்

## விக்கி வெளிப்படைக் கருத்து




(எஸ்.நிதர்ஷன்)

**"தமிழ்ப் பொது வேட்பாளரைத் தெரிவு செய்வதில் சிக்கல்கள் இருக்கின்றன. ஆனாலும், அநேகமாக இந்த வாரத்துக்குள் தமிழ்ப் பொது வேட்பாளரைத் தெரிவு செய்து விடுவோம்."**

**- இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின் போது தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் நிறுத்தப்படுவது ரணிலுக்கோ, சஜித்துக்கோ அல்லது வேறு எவருக்குமோ ஆதரவை வழங்குவதற்காக அல்ல. இதில் ரணிலுக்கா என்று கூறுவது முற்றிலும் தவறானது. உண்மையில் எமது தமிழ் மக்களுக்காக அவர்களின் எதிர்காலத்துக்காகவே இந்த முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழ்ப் பொது வேட்பாளர் தேர்வில் பலருடைய பெயர்கள் இருக்கின்றன. அதில் ஒருவரைத் தேர்வு செய்வதென்றால் மாறி மாறி குற்றச்சாட்டுகள் சொல்லி வருகின்ற நிலைமை உள்ளது.

அதிலும் ஏதாவது ஒருவிதத்தில் தான் நினைக்கின்ற ஒருவர்தான் தமிழ்ப் பொது வேட்பாளராக வர வேண்டுமென யோசிக்கின்றவர்களும் இருக்கின்றனர். அவர்கள் மிடுக்கோடு பேசுகின்றவர்களாக இருக்கின்ற நிலைமையில் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் சற்று தாமதமாகின்றது.

மேலும் இவர்கள் ஒருவரைச் சுட்டிக்காட்டி அவரை அழைத்தால் அவர் தான் வரமாட்டேன் எனக் கூறுகின்ற நிலைமையும் உள்ளது. உண்மையில் ஒருவரைத் தெரிவு செய்வதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. ஆனாலும் அநேகமாக இந்த வாரத்துக்குள் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து விடுவோம்.

இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரத்தைக் கைவிடச் சொல்லி தூதரகங்களின் அழுத்தம் ஏதும் இல்லை. இந்தியத் தரப்பின் அழுத்தங்கள் இருப்பதாக எனக்குத் தெரியாது. என்னுடன் இப்படிப்பட்ட விடயங்களை அவர்கள் கதைப்பது குறைவு. ஏதாவது கலாசாரம், இலக்கியம், சமயம் ரீதியாகத் தான் என்னுடன் அவர்கள் கதைப்பார்கள். இப்படிப்பட்ட விடயங்களை. கதைப்பது குறைவு. அதனால் இதைப் பற்றி எனக்குத் தெரியாது.

ஆனால், சுமந்திரன்தான் இப்ப பெரிய சத்தம் எல்லாம் போட்டுக் கொண்டிருக்கின்றார். அதாவது தாங்கள் எப்படியாவது தமிழ்ப் பொது வேட்பாளர் நியமிப்பதை நிறுத்துவோம் என்றும், தங்களைத் துரோகி என்று சொன்னாலும் பயப்படமாட்டோம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்றார்.

இதனைவிடத் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டாமென வேறு அழுத்தங்கள் வரவில்லை. ஆனா.ல், சிங்கள வேட்பாளர்களிடைய ஒருவிதமான அச்சமும் பயமும் அருவருப்பும் வந்திருப்பதாகத் தெரிகின்றது." - என்றார்.

# சு.கவின் நிமல் அணி ஜனாதிபதிக்கு ஆதரவு

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா அணி தீர்மானித்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா அணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதன்பின்னர் நிமல் அணியின் முக்கியஸ்தர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இதன்போதே சுதந்திரக் கட்சியின் ஆதரவை ஜனாதிபதி ரணிலுக்கு நிமல் அணியினர் தெரிவித்துள்ளனர் .





# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றிச் சாதனை

## சந்திரசேன எம்.பி. ஆரூடம்

"ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதவளிப்பேன். அந்தத் தேர்தலில் அவர் மாபெரும் வெற்றிச் சாதனை படைப்பார்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுர மாவட்டத்தில் கட்சி ஆதரவாளர்களிடம் கருத்துக் கோரிய பின்னரே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

மொட்டுக் கட்சியின் முக்கிய அரசியல் புள்ளிகளுள் எஸ்.எம். சந்திரசேனவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரணிலுக்கு நேசக்கரம் நீட்டியோரின் பதவிகளைப் பறிக்கின்றது 'மொட்டு'

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் தமது கட்சியின் மாவட்ட தலைவர்களை அப்பதவியில் இருந்து தூக்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி கம்பஹா மாவட்ட தலைவரான பிரசன்ன ரணதுங்க, காலி மாவட்ட தலைவரான ரமேஷ் பத்திரண, கண்டி மாவட்ட தலைவரான மஹிந்தானந்த அளுத்கமகே, அநுராதபுரம் மாவட்ட தலைவர் எஸ்.எம். சந்திரசேன உள்ளிட்டவர்கள் நீக்கப்படவுள்ளனர்.

அவர்களுக்குப் பதிலாக புதிய மாவட்ட தலைவர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கையை மாவட்ட மட்டத்தில் தீவிரமாக முன்னெடுக்கும் நோக்கிலேயே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!

மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து குருநாகல், கும்புக்கெட்டே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இப்பாகமுவ – மடகல்ல வீதியில் கும்புக்வெவ பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் விபத்து இடம்பெற்றுள்ளது.

மடகல்லவிலிருந்து இப்பாகமுவ நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் படுகாயமடைந்த நிலையில், ஹிரிபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.




புஸ்ஸெலிதென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கும்புக்கெட்டே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டைப் புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ரணில் விக்கிரமசிங்க, மத்திய அரசு, 9 மாகாண அரசுகள் உள்ளடங்களாக 10 அரசுகளின் கீழ் உள்ள அனைவருக்கும் பொறுப்புகளை வழங்கி நாட்டை முன்னேற்றுவேன் என்றும் உறுதியளித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபைகளின் முன்னாள் பிரதிநிதிகளுடன் பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று நடத்திய சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

"நாட்டில் வளர்ச்சி கண்டு வரும் பொருளாதாரத்தைப் பாதுகாத்து முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையை மீற முடியாது. தேர்தல் நடத்தப்பட்டாலும் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவது அனைவரினதும் பொறுப்பு." - என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"எனக்காக இங்கு வந்து என்னை ஆதரித்த அனைவருக்கும் நன்றி. நாம் அனைவரும் 2022 ஜுலை மாதத்தில் வீடுகளை இழந்தோம். இந்த நாட்டுக்கு எதிர்காலம் இருக்காது என்றே மக்களும் நினைத்தனர்.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது என்று பலரும் நினைத்தனர். ஏன் இந்த அரசைப் பொறுப்பேற்றுக் கொண்டீர்கள் என்று சிலர் என்னிடம் கேட்டனர். இந்த நாட்டை மீட்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது என்று சொன்னேன். மொட்டுக் கட்சிக்கு அதற்கான அனுபவம் உள்ளதா என்று சிலர் கேள்வி எழுப்பினர். இருப்பவர்களை வைத்து வேலை செய்வதே சிறந்தது. மாறாக புதியவர்களை வடிவமைக்க எமக்கு நேரம் இருக்கவில்லை. அதனால் இந்தப் பயணத்தைத் தொடர்வோம் என்றேன். இப்போது நல்ல குழுவொன்று உருவாகியுள்ளது.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என அனைவரும் ஒன்றிணைந்து முதலில் இந்த நாட்டில் ஸ்திரத்தன்மையை உருவாக்கினோம். அன்று நாட்டில் பெரும் அச்சம் நிலவியது. எம்.பி.க்கள் வீதியில் கொல்லப்பட்டால் நாட்டின் நிலை என்னவாகும்? அப்படிப்பட்ட நிலையை நாம் கடந்து வந்திருக்கின்றோம்.

நாட்டைவழமையானநிலைக்குகொண்டுவரவும்,வங்குரோத்து நிலையில் இருந்து விடுவிக்கவும் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளோம். அதனால் அந்தப் பணிகள் முடிந்துவிடவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின்படி நாம் செயற்பட வேண்டும். அதை உடைத்தால் நாடு மீண்டும் படுகுழியில் விழும்.

அவர்கள் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே எமக்கு நிதி உதவிகளை வழங்குகின்றனர். நாமும் அதற்கு உடன்பட்டிருக்கின்றோம். அதற்கமைய பயணிக்க வேண்டும். டிசம்பர் வரையில் போதுமான பணம் மட்டுமே எம்மிடம் உள்ளது. ஜனவரியில் சர்வதேச நாணய நிதியத்துடன் மற்றுமொரு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட வேண்டியுள்ளது.

அதனால் ஜனவரி, பெப்ரவரிக்குள் அந்தப் பணம் கிடைத்துவிடும். ஆனால், இது குறித்துபுதிதாகஆராயநீண்டகாலம்தேவைப்படும். அதன் பின்னர் இந்தப் பணிகளை நிறைவு செய்ய ஒரு வருடமாவது தேவைப்படும். பணம் இல்லாமல் நாம் முன்னேற முடியாது. எனவே, இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து பணத்தைப் பெறுவதா? இல்லையா? என்பதை முடிவு செய்ய வேண்டும்.

நாட்டிலுள்ள இளைஞர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். அவர்களுக்குத் தொழில் வழங்க வேண்டும். வறுமையை ஒழித்து நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். அந்த நடவடிக்கைகளுக்காக நான் 9 மாகாண அரசுகள் மற்றும் மத்திய அரசு உள்ளடங்களாக 10 அரசுகளின் கீழ் உள்ள அனைவருக்கும் பொறுப்புகளை வழங்குவோம்.

பாரபட்சமின்றி நாட்டைப் புதிய கோணத்தில் முன்னோக்கிக் கொண்டு செல்லவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றேன். இந்தப் பயணத்தைத் தொடர்வோம். அனைவரும் இணைந்து முன்னேறுவோம்.

2022 இல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் பெரும்பான்மையானவர்கள் என்னை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளனர். அந்த ஆதரவு இல்லாவிட்டால் இன்று நாடு இந்த நிலையை அடைந்திருக்காது. எனவே, அந்தத் தீர்மானத்தை எடுத்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி கூறுகின்றேன். அவரின் தீர்மானம் நாட்டைக் காப்பாற்றியது. கட்சிகளைப் பிளவுபடுத்த வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. முடிந்த வரையில் கட்சிகளைப் பாதுகாத்துக்கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டும்.

மேடையில் இருந்து கூச்சலிடுவதில் அர்த்தமில்லை. பொருளாதாரத்தைப் பாதுகாத்து முன்னேற வேண்டும். சர்வதேச ஒப்பந்தங்களை திரும்பப் பெற முடியாது. அதைப் பாதுகாத்து முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். தேர்தல் வந்தாலும் அது நமது கடமையாகும்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும். அந்தத் தேர்தலை 1988 முறைப்படி நடத்த எதிர்பார்க்கின்றோம். இது குறித்து நேற்று (நேற்றுமுன்தினம்) நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் பேசினேன். அவரும் இணக்கம் தெரிவித்தார். அந்தத் தேர்தலில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்காமல் மாகாண சபைகளுக்கு போட்டியிட வாய்ப்பு கிடைக்கும். அனைவரும் அரசாகச் செயலாற்ற வேண்டும்.

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட ஒன்பது பேருடன், அரசின் கீழ் நிதி அமைச்சர்கள் குழுவும் உள்ளது. அரச சபையொன்றையும் முன்மொழியவிருக்கின்றோம். அதில் ஜனாதிபதி, பிரதமர், கட்சித் தலைவர்கள் மற்றும் முதலமைச்சர்கள் அங்கம் வகிப்பர். 2017 ஆம் ஆண்டு அரசமைப்புத் திருத்தக் குழுவுக்கு வழங்கப்பட்ட அறிக்கையின் பரிந்துரைகளின்படி 7 மாகாணங்களின் முதலமைச்சர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

தமிழ்க் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன. பொலிஸ் அதிகாரம் பற்றி பின்னர் பேசலாம், இந்த நடவடிக்கைகளை இப்போது நடைமுறைப்படுத்துவோம் என்று அறிவித்துள்ளோம். விவசாயம் நவீனமயமாக்கல், பாடசாலைக் கல்வி, சுற்றுலாப் பொறுப்புகள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். எம்மிடம் பெரிய பணிக்குழுவொன்று உள்ளது. போட்டியிடுகிறேன். மத்திய அரசு , 9 மாகாண அரசுகள் உள்ளடங்களாக இந்த 10 அரசுகள் ஊடாக நாட்டை முன்னேற்றிச் செல்ல எதிர்பார்க்கின்றோம்." - என்றார்.

# இன்னுமொரு தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சி.வி.விக்னேஸ்வரன் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டைப் பொறுத்தவரையில் இப்பொழுதும் எனக்கு ஒரு கரிசனை இருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாட்டில் கலவரங்கள வெடிக்கக்கூடும்.

சிங்கள வேட்பாளர்களிடையே ஐம்பது சதவிகித வாக்கைப் பெறக் கூடியவர்கள் என்று எவரும் இல்லை. உண்மையில் அவர்கள் ஐம்பது சதவிகித வாக்குகளுக்கும் குறைவாகத்தான் பெறுவார்கள்.

ஆனால், இந்தத் தேர்தலில் பல பேர் போட்டியிடுகின்றார்கள் என்று கூறினாலும் ரணில், சஜித், அநுர என்ற மூன்று பேர்தான் முக்கியமானவர்கள். இந்த மூவருக்கும் இடையில் என்ன மாதிரியான போட்டி நடக்கப் போகின்றது.?

இந்தத் தேர்தலில் மொட்டுக் கட்சியின் பங்கு என்னவென்று கேட்டீர்களானால் அந்தக் கட்சியில் இருப்பவர்கள் திரும்பவும் ஒரு தேர்தல் வந்தால் முழுமையாக அழிக்கப்பட்டு விடுவார்கள் என்றே கருதுகின்றேன்.

அதாவது தெற்கிலே இருக்கின்ற அவர்களுடைய ஆசனங்கள் எல்லாம் ஜே.வி.பி. கட்சிக்குப் போய்விடும் என்பது என்னுடைய கருத்து. அந்தளவுக்கு இந்த நாட்டுக்கு அவர்கள் செய்த துரோகம் மக்கம் மனதிலே இருக்கின்றது.

குறிப்பாக இந்த நாட்டை அவர்கள் சூறையாடி இருக்கின்றார்கள், போர், போர் என்று போரின் காரணமாகத் தங்களைத் தாங்கள் அவர்கள் வளர்த்துக்கொண்டார்கள். இவையெல்லாம் மக்களுக்கு இப்போது நன்றாகத் தெரியும்.


ஆகவே, எந்தவிதத்திலும் தற்போது இருக்கின்ற நாட்டின் ஸ்திரத்தன்மையை இல்லாமல் பண்ணுவதற்கு அவர்கள் விரும்பமாட்டார்கள். ஆனால், தங்களுடைய கட்சியின் தனித்துவத்தை வெளிக்கொணர வேண்டும் என்ற முறையில் ஏதோ சில பேச்சுக்கள் எல்லாம் பேசி வருகின்றனர்.

ஆனாலும், அவர்கள் கட்டாயமாக ரணிலுக்கு ஆதரவைத் தெரிவிப்பார்கள் என்பது என்னுடைய கருத்தாக உள்ளது.

இப்போது மொட்டுக் கட்சியில் உள்ள பலர் ரணிலுக்கு ஆதரவைத் தெரிவித்துள்ள அதேநேரத்தில் தங்களுடைய தனித்துவத்தை எடுத்துக் காட்டி வேறொரு வேட்பாளரைப் போடக் கூடும். ஆனால், அவர்களில் 92 பேர் ரணிலுக்கு ஆதரவு என்றால் மற்றையவர்களும் இதே மாதிரியான மனோநிலையில் இருப்பார்கள் என்றுதான் நான் நம்புகின்றேன்.

எனினும், முழுமையாக ரணிலிடம் தாங்கள் சரணடைந்து விட்டோம் என்று காட்டுவது அவர்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். அதனால் இறந்துகொண்டு போறவன் எப்படியாவது வைக்கோலைப் பிடிக்கின்ற மாதிரி ஏதாவது ஒன்றைச் சொல்லி தாங்கள் இன்னும் மக்கள் ஆதரவுடனே இருக்கின்றோம் என்று காட்டுவதற்குப் பலதும் பேசுவார்கள்.

இப்போது அரசோடு சேர்ந்திருப்பவர்கள் அதிகமாக ரணிலுக்கு ஆதரவை வழங்குவார்கள் என்றே நம்புகின்றேன். ஏனெனில் ராஜபக்ஷக்களோடு இருப்பவர்கள் நாடாளுமன்றத்தில் இருந்து வெளியே வந்துவிட்டால் அதன் பின்னர் நாடாளுமன்றம் போகக் கூடிய நிலைமை பலருக்கு இல்லை என்பது என்னுடைய கருத்தாகும்." - என்றார்.



# ஜனாதிபதி - குகதாசன் எம்.பி. நேற்று நேரில் சந்தித்துப் பேச்சு

## திருகோணமலை நிலவரம் தொடர்பில் கலந்தாய்வு

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் திருகோணமலை மாவட்டத்தின் புதிய நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுள்ள கதிரவேலு சண்முகம் குகதாசன் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பு கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது திருகோணமலை மாவட்டத்தில் நிலவும் பல்வேறு தேவைகள் மற்றும் அபிவிருத்தி பற்றி ஜனாதிபதியுடன் குகதாசன் எம்.பி. கலந்துரையாடினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளே இருந்து வெளியே தள்ளித் திறந்து கொண்டு வெளியேயும் போகலாம்' என்று கூறுவார்கள்.

அதாவது கட்சிக்குள் யாரும் விரும்பினால் வரலாம். அதுபோல விரும்பினால் யாரும் போகலாம். ஒருவரையும் இழுத்துப் பிடிக்கவோ அல்லது வழிமறிக்கவோ அல்லது வெளியே தள்ளவோ யாரும் முயல மாட்டார்கள். 'விரும்பினால் வாங்கள், விரும்பாவிட்டால் போங்கள்' என்ற சாரபட்ட கருத்தை கூறுவதற்குத் தான் இந்தச் சலூன் கதவு ஒப்பீடு.

இப்போதும் – இந்த நெருக்கடி சமயத்திலும் – மொட்டு கதவு, சலூன் கதவு போன்றுதான் இருக்கின்றது. யாரும் வரலாம். யாரும் போகலாம். யாரையும் இழுத்துப் பிடிக்க மாட்டோம் என்ற சாரப்பட்ட நிலைப்பாட்டையே மொட்டுத் தலைமை இந்தச் சமயத்திலும் உறுதியாக கைப்பிடித்து நிற்கின்றது.

நரித்தந்திர சாலியான ரணிலை அரவணைத்தமையால் ரணிலின் சனிப் பார்வை மொட்டுக் கட்சி மீதும் விழுந்தது. அதனால் அது இப்போது பிளந்து கொண்டிருக்கின்றது.

முன்னைய கூட்டு இப்போது பூட்டுடைந்த கதவாகிவிட்டது. அதனால் இது வரை காலமும் மறைக்கப்பட்டு இருந்த பொட்டுக்கேடுகள் வரிசையாக அம்பலத்துக்கு வரும் என்று எதிர்பார்க்கலாம்.

அந்த வரிசையில், ஜனாதிபதி ரணில் தரப்பிடம் மதுபான பெர்மிட் வாங்கி அதன் மூலம் பல கோடி ஏப்பமிட்ட மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் – எம்.பிக்கள் – பலர் இப்போது தத்தமது கட்சியின் வில்லன்களாகி விட்டனர்.

இத்தகையோரின் பட்டியல்கள் மற்றும் விவரங்களை எடுத்துக்கொண்டு மொட்டுக்கட்சி முக்கியஸ்தர்கள் சிலர் அடுத்து வரும் தினங்களில் தேர்தல்கள் ஆணையாளர்களிடம் செல்லவிருக்கின்றனர் என்று தெரிகின்றது.

மொட்டுக் கட்சியின் தலைமைக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டுக்கும் இடையில் பெரும் முரண்பாடு ஏற்பட்டிருந்தாலும் இன்னொரு தடவை ஆதரவு கேட்டு மொட்டுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ரணில் விக்கிரமசிங்க நேரடியாகப் போவதற்கான முயற்சியில் இருக்கின்றார் என்று தெரிகின்றது. இது தலைவர்களின் சந்திப்பு. மீண்டும் ஒரு தடவை அடுத்து வரும் சில நாள்களில் இடம்பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

## ரணிலின் பெரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபைகளின் முன்னாள் பிரதிநிதிகளுடன் பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் ஜனாதிபதி நேற்று நடத்திய சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு உறுதியளித்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, ஜானக வக்கும்புர, நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன உள்ளிட்டோர் இந்தச் சந்திப்பில் உரையாற்றினார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, அனுர பியதர்ஷன யாப்பா, இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத், நாடாளுமன்ற விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஒருங்கிணைப்புச் செயலாளர் ஆஷு மாரசிங்க, முன்னாள் முதலமைச்சர்கள், முன்னாள் மாகாண அமைச்சர்கள், முன்னாள் மாகாண சபை பிரதிநிதிகள் உள்ளிட்ட பெருந்திரளானோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# 'மொட்டு' ஆதரவின்றி ரணில் வெல்வாராம்

## அமைச்சர் மனுச நாணயக்கார கூறுகின்றார்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவு இல்லாவிட்டாலும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றி பெறுவார் என்று அமைச்சர் மனுச நாணயக்கார தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுடன் பயணிக்க வேண்டும் என்ற முடிவிலேயே மஹிந்த ராஜ



பக்ஷ, பஸில் ராஜபக்ஷ மற்றும் சமல் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் இருந்தனர். எனினும், நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினரே இதற்கு எதிராகச் செயற்பட்டனர். அதன் பிரதிபலன் தேர்தலில் அவர்களுக்குக் கிடைக்கும்.

தேசிய சபைக் கூட்டத்தில் 16 எம்.பிக்களே இருந்துள்ளனர். மொட்டுக் கட்சியில் உள்ளவர்களில் 90 வீதமானோர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு. நாடு பற்றி சிந்தித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானங்களை எடுத்தாரேதவிர, மொட்டுக் கட்சியைத் திருப்திப்படுத்த முடிவுளை எடுக்கவில்லை என்பதை மொட்டுக் கட்சியினரே தற்போது வெளிப்படுத்திவிட்டனர்.

மொட்டுக் கட்சி தனது முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என நாம் வற்புறுத்தப்போவதில்லை. ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சி ஆதரவு வழங்காவிட்டாலும் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றி பெறுவார்.

மொட்டுக் கட்சியின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்." - என்றார்.

# கடவத்தை - கோட்டை 138 ஆம் இலக்க மார்க்க சேவையில் ஈடுபடும் பஸ் சாரதிகள் போராட்டம்

கடவத்தை - கோட்டை வரை சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் சாரதிகள் நேற்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்படி கடவத்தை - கோட்டை, வெலிவேரிய - கோட்டை, மற்றும் கிரில் லவல - கோட்டை ஆகிய பகுதிகளில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் சாரதிகளே வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக பயணிகளின் சிரமத்தைக் குறைக்கும் வகையில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பல பஸ்கள் நேற்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

கிரிபத்கொட- புறக்கோட்டை மார்க்கத்தில் புதிய பஸ்கள் பலவற்றுக்கு அனுமதி வழங்கியதன் மூலம் தமது வருமானத்துக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று 138 இலக்க பஸ் சாரதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, கடவத்தை - கோட்டை பஸ் தரிப்பிடத்தில் அதிகளவு சேறு படிந்துள்ளதால் பஸ்கள் பழுதாகி வருகின்றன என்று தெரிவிக்கும் பஸ் சாரதிகள், அப்பகுதியில் கழிவறைகள் நிரம்பி வழிவதால் கடும் துர்நாற்றம் வீசுகின்றது என்றும் குறிப்பிட்டனர்.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கோரியே தாம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதாகவும், இதற்குத் தீர்வு கிடைக்காவிடின் பஸ் சேவையைக் கைவிடுவதாகவும் தனியார் பஸ் சாரதிகள் மேலும் தெரிவித்தனர்.

# ஐ.தே.கவில் இணைந்தார் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஐக்கிய குடியரசு முன்னணியின் சிரேஷ்ட உப தலைவராகச் செயற்பட்டு வந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க மற்றும் அவரது மனைவி கல்காரி சுபோதா ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்டனர்.

இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் ரங்கே பண்டாரவிடமிருந்து கட்சி அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணகளமாகும் மத்திய கிழக்கு

உலக மனிதப் பேரவலம் அரங்கேறும் மையமாக மாறியுள்ள மத்திய கிழக்கு இனி இன்னும் மோசமான நிலைமையை நோக்கிநகரப்போகின்றது என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியே படுகொலை செய்யப்பட்டமை - அதுவும் ஈரான் மண்ணில் வைத்து வான்வழித் தாக்குதல் மூலம் கொல்லப்பட்டிருக்கின்றமை - மத்திய கிழக்கில் மிக மோசமான இரத்தக் களரிக்கு வெற்றிலை வைத்திருக்கின்றது என்பது உறுதி.

இந்தப் படுகொலைக்குப் பழிவாங்குவோம் என்று ஈரான் பகிரங்கமாக பிரகடனப்படுத்தியிருக்கின்றது. இஸ்ரேலின் நாசகார வேலை அது என்று ஈரான் நேரடியாகக் கண்டித்தும் உள்ளது.

இந்தப் படுகொலைக்கு நேற்று வரை இஸ்ரேல் பொறுப்பேற்று அறிவித்தல் விடவில்லையாயினும் ஹமாஸ் தலைமை பூண்டோடு அழிக்கப்படும் என இஸ்ரேல் தொடர்ந்து கொக்கரித்து வந்த நிலையில் அதன் ஒரு நடவடிக்கையாகவே ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியேவின் படுகொலை அரங்கேறி இருப்பதாகக் கருதப்படுகின்றது.

ஹமாஸ் தலைவரின் மரணத்துக்கு மூன்று நாள் துக்க தினம் அறிவித்திருக்கும் ஈரான், இந்தப் படுகொலையைச் செய்த இஸ்ரேல் இதற்காக மோசமாக தண்டிக்கப்படும் என்றும் அறிவித்திருக்கின்றது.

வடக்கு ஈரானில் இஸ்மாயில் ஹனியேயும் அவரது உதவியாளரும் தங்கி இருந்த விருந்தினர் விடுதி உள்ளூர் நேரப்படி நேற்று புதன்கிழமை அதிகாலை 2 மணி அளவில் ஈரானின் எல்லைக்கு அப்பாலிருந்து ஏவப்பட்ட ஏவுகணையால் துல்லியமாகத் தாக்கி அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே ஈரானின் அணு விஞ்ஞானிகள் பலரை இஸ்ரேல் இதே போன்ற அதிரடி தாக்குதல்கள் மூலம் கொன்றொழித்திருக்கும் சூழலில், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒருவர் இவ்வாறு வான் வழி ஏவுகணை மூலம் துல்லியமாக இலக்கு வைத்து அழித்திருக்கின்றமை இதுவே முதல் தடவை என்று சுட்டப்படுகின்றது.

இந்தத் துல்லியமான - துணிச்சாலான - தாக்குதல் ஈரானின் உள்நாட்டு பாதுகாப்புக் குறித்து பலத்த சந்தேகங்களையும்குழப்பங்களையும்ஏற்படுத்தி இருப்பதையும் மறுக்க முடியாது.

ஈரானுக்குள் இஸ்ரேலின் உளவுத் துறை ஆழமாக ஊடுருவி விட்டது என்றும், அதனால் ஈரான் அதிகாரிகள் தங்கள் பாதுகாப்புக் குறித்து பேரச்சம் கொண்டுள்ளனர் என்றும், முன்னாள் புலனாய்வு அமைச்சர் அலி யுனெஸ்ஸி மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே எச்சரித்திருந்தார். அது இப்போது நிரூபணமாகி வருவதாகக் கூறப்படுகின்றது.

காசாவில் நிரந்தர யுத்த நிறுத்துக்கான முயற்சி இந்தப் படுகொலையினால் சாண் ஏற முழம் சறுக்கிய கதையாக வழுக்கிச் சென்று இருக்கின்றது.

அப்படி இருந்தும் காசாவில் நிரந்தர யுத்தநிறுத்தத்தைஏற்படுத்துவதற்கான தங்கள் முயற்சியை அமெரிக்க வெளிவிகார அமைச்சர் அண்டனி பிளிங்கனும் கட்டார் பிரதமர் ஷேக் முகமது பின் அப்துல் ரஹ்மான் அல்தாரியும் தொடர்வார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

எனினும் தங்கள் மண்ணில் தங்கி இருந்த ஹமாஸ் தலைவர் ஒருவரை, தங்கள் நாட்டுக்குள் இலக்கு வைத்து இஸ்ரேல் தாக்கிக் கொன்றுள்ளது என்று சீற்றம் கொண்டிருக்கும் ஈரான், இதற்குப் பழி தீர்க்கும் மிக மோசமான பதில் நடவடிக்கை ஒன்றைச் செய்து காட்டாமல் தளராது என்று சர்வதேச பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

ஈரான் எடுக்கப் போகும் பதில் நடவடிக்கை மத்திய கிழக்கில் நிரந்தர பெரும் யுத்தத்திற்கான அடித்தளமாக மாறிவிடும் பேராபத்தும் உண்டு.

ஈரானின் புதிய அதிபராக சீர்திருத்தவாதியான மசூத் பெசஷ்கியான் பதவியேற்கும் சமயத்தில் இந்தத் தாக்குதல் நடந்திருக்கின்றமையும் புதிய மோசமான திருப்பங்கள் மத்திய கிழக்கில் ஏற்படும் என்ற அச்சத்தத் தந்து நிற்கின்றன.

## வயநாடு நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள

# கேரளாவுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் 5 கோடி ரூபா நிவாரண நிதி வழங்கல்!

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

கேரளா பார்த்திராத நிகழ்வாக வயநாட்டில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. நிலச்சரிவில் சிக்கி இதுவரை 5 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் சார்பில், பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருவனந்தபுரம் சென்று கேரள மாநில முதல்வர் பினராயி விஜயனை தலைமைச் செயலகத்தில் சந்தித்து 5 கோடி ரூபாவுக்கான காசோலையை தமிழ் நாடு அரசு சார்பாக வழங்கினார்.

கேரளா மாநில முதல்வர் பினராயி விஜயன் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

கேரள மாநிலம், வயநாட்டில் பெய்த கன மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

நிலச்சரிவால், அட்டமலை, முண்டக்கை, சூரல்மலை ஆகிய பகுதிகள் முற்றிலும் உருகுலைந்து போயுள்ளன. அங்கு மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த பகுதிகள் முற்றிலும் சேறும், சகதியுமாகவும், இடிபாடுகள் நிறைந்ததாகவும் காணப்படுகின்றன.

இதற்கு முன் கேரளா பார்த்திராத நிகழ்வாக வயநாட்டில் பெரும் நிலச்சரிவு அரங்கேறியுள்ளது. முண்டக்கை, சூரல் மலை போன்ற மலைக் கிராமங்கள் காண முடியாத அளவு சேதம் அடைந்துள்ளன.

அடுத்த 24 மணி நேரத்தில் அதிக கன மழைக்கு வாய்ப்பு உள்ளது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அட்டமலை, சூரல் மலையில் முழுவீச்சில் மீட்புப் பணிகள், நிவாரணப் பணிகள் நடைபெறுகின்றன. உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லக் கடற்படையின் உதவி கோரப்பட்டுள்ளது. கடலோர பொலிஸார் உள்பட ஆயிரத்து 257 பேர் மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.



17 லொரிகள் மூலம் தேவையான உதவிப் பொருள்கள் சூரல் மலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. தடயவியல் நிபுணர்களின் உதவியுடன் பிரேத பரிசோதனை வேகமாக நடைபெறுகிறது.

நிலச்சரிவில் சிக்கி 5 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் இதுவரை மீட்கப்பட்டுள்ளனர். நிலச்சரிவில் சிக்கி 191 பேர் காணாமல்போய் உள்ளனர். மீட்கப்பட்ட 144 சடலங்களில் 76 ஆண்கள் மற்றும் 64 பெண்களும் உள்ளனர். மீட்கப்பட்ட சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட மலைப்பகுதிகளில் மீட்பு குழுவினர் செல்ல தற்காலிக பாலம் அமைக்கப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மந்திஅதிக கூடுதல் டாக்டர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். சூரல் மலை பகுதியில் மின்விநியோகத்துக்கான பணிகள் முழு வீச்சில் நடந்து வருகிறது. உறவுகளை இழந்தவர்களை மனரீதியாக தேற்றவேண்டியுள்ளது.– என்றார்.

# தமிழக அரசை மதிக்காமல் செயல்படும் கர்நாடக காங்கிரஸ்

## பாஜக தலைவர் அண்ணாமலை விமர்சனம்

மேகதாது அணை தொடர்பாக, தமிழக அரசுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தியும், தமிழக அரசுடன் பேச்சு நடத்தத் தாங்கள் தயாராக இல்லை என்று கர்நாடக மாநில காங்கிரஸ் அரசின் துணை முதலமைச்சர் சிவக்குமார் தெரிவித்திருக்கிறார்.

இந்த நிலையில் தமிழக அரசை மதிக்காமல் செயல்படுகிறது கர்நாடக காங்கிரஸ் கட்சி என விமர்சித்திருக்கிறார் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை.

காவிரியின் குறுக்கே மேகதாது பகுதியில் அணை கட்டியே தீருவோம் என்ற முடிவில் கர்நாடக அரசு பிடிவாதமாக இருக்கும் நிலையில், இது தொடர்பாக சுற்றுச் சூழல் அனுமதி கோரி விண்ணப்பித்தது கடும் அதிர்வலைகள் ஏற்படுத்தியது.

காவிரியின் குறுக்கே மேகதாது அணையைக் கட்ட விடமாட்டோம். காவிரியின் உரிமையைக் காக்க தமிழக அரசு தொடர்ந்து போராடும் என தமிழக முதல்வர் ஸ்டாலின் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுள் ஒன்று காவிரிப் பிரச்சினை. தமிழ்நாட்டுக்கான முழு உரிமை உள்ளதும் காவிரி நீர் ஆகும். எனவே, காவிரி நீர் உரிமையைப் பெறுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவுக்கும் சென்று போராடும் எனவும் அவர் கூறியிருந்தார்.

இந்த நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் பதவியேற்ற மோடி தலைமையிலான அமைச்சரவையில் நீர்வளத்துறை இணையமைச்சராக வி.சோமண்ணா பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் கர்நாடகத்தை சேர்ந்தவர்.

அப்போதே மேகதாது அணைக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வந்த இவர், ஒன்றிய நீர்வளத்துறை இணை அமைச்சராக சோமண்ணா நியமிக்கப்பட்டபோதே அதற்கு தமிழக விவசாயிகளிடம் இருந்து எதிர்ப்பு எழுந்தது. இது தொடர்பாக தமிழக விவசாயிகள் போராட்டத்தையும் முன்னெடுத்தனர்.

இதற்கிடையே மேகதாது அணை விவகாரம் தொடர்பாகப் பிரதமர் மோடியுடன் துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் சந்திப்பு மேற்கொண்டார். அந்த சந்திப்பில் மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாடு, கர்நாடகாவும் அமர்ந்து பேசி சுமூக தீர்வை எட்ட வேண்டும் என பிரதமர் மோடி யோசனை வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் தமிழக அரசுடன் பேச்சு நடத்தத் தயாராக இல்லை என்று கர்நாடகத் துணை முதலமைச்சர் டி.கே. சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இந்தியா கூட்டணியில் இருந்தாலும் தமிழக அரசை மதிக்காமல் செயற்படுகிறது கர்நாடக காங்கிரஸ் கட்சி என்று விமர்சித்திருக்கிறார் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை.





# முக்கிய தலைவர்களின் கொலையால் மத்திய கிழக்கில் பெரும் போர் பதற்றம்!

ஹமாசின் முக்கிய தலைவரான இஸ்மயில் ஹனியே கொல்லப்பட்ட சம்பவம், மத்திய கிழக்கில் மிகப் பெரிய போரை ஏற்படுத்தப் போகின்றது என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பின் தலைவர் கொல்லப்பட்டார் என்பதைக் கடந்து அவர் ஈரானின் தலைநகர் டெகரானில் வைத்துப் படுகொலைசெய்யப்பட்டார் என்பது, உண்மையிலேயே பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதான ஒரு சம்பவம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஈரான் தலைநகர் டெகரானில் மீது தாக்குதல் இடம்பெறுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக, லெபனான் தலைநகர் பெய்ரூட்டிலும் இஸ்ரேல் ஒரு விமானத் தாக்குதலை மேற்கொண்டிருந்தது.

ஹிஸ்புல்லா அமைப்பின் உயர் மட்டத் தலைவரைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட அந்தத் தாக்குதலில், மூன்று பேர் கொல்லப்பட்டதுடன் 74 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த இரண்டு சம்பவங்களையும் தொடர்ந்து மத்தியக் கிழக்கில் மிகப் பெரிய போர் பதற்றம் உருவாகியுள்ளது.




# ஊழலுக்கு எதிரான உகண்டா!

இது எங்கள் நாடு. எங்கள் எதிர்காலத்துக்காகவே போராடிக் கொண்டிருக்கிறோம் என்று உகண்டா மக்கள் தெரிவித்துள்ளனர்.

உகாண்டா நாட்டின் தலைநகர் கம்பாலாவில் கடந்த செவ்வாயன்று நடந்த ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் மக்கள் இவ்வாறு உரக்கத் தெரிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 40 ஆண்டுகளாக உகாண்டா அதிபராக உள்ள முசவேனி, "நீங்கள் அனைவரும் நெருப்புடன் விளையாடுகிறீர்கள்" என்று போராடும் மக்களை எச்சரித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக கென்யாவில் அரசுக்கு எதிராக நடந்துவரும் போராட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு உகாண்டா போராட்டத்தை நடத்துவதாக போராட்டக்காரர்கள் கூறுகின்றனர்.

# ஜனாதிபதியின் செயற்பாட்டுக்கு எதிராக தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

"சுயாதீன வேட்பாளர் என்று அறிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச நிதி மற்றும் சொத்துக்களைத் தவறான வகையில் பயன்படுத்தி ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்களை முன்னெடுக்கின்றார். தேர்தல் சட்டத்துக்கு அமைய செயற்படும் ஏனைய வேட்பாளர்களுக்கு இதனால் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்." – என்று புதிய சுதந்திர முன்னணி, தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்துள்ளது.

புதிய சுதந்திர முன்னணியால் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுவதற்குக் கட்டுப்பணம் செலுத்தியுள்ள ஜனாதிபதியும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவால் தேர்தல்கள் சட்டம் மீறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய சுயாதீன ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் உட்பட ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்குவது குறித்து பேசியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு உரிய புகைப்படங்கள், காணொளிகள் மற்றும் உத்தியோகபூர்வ ஊடக அறிக்கைகளை ஜனாதிபதி ஊடகப் பிரிவு முழுமையாக பிரசாரம் செய்துள்ளது.

தான் ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி என்ற ரீதியில்தனக்குப்பொறுப்பாக்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிப்பதைத் தவிர்க்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் வரிப்பணத்தால் பராமரிக்கப்படும் ஜனாதிபதி செயலகம் மற்றும் அதன் வளங்கள், மக்களின் வரிப்பணம் ஊடாக சம்பளம் பெறும் பணிக்குழுவினர் உட்பட ஜனாதிபதி ஊடகப் பிரிவைப் பயன்படுத்தி தனது ஜனாதிபதித் தேர்தல் கருத்திட்டத் திட்டத்துக்கான பேச்சுகளை முன்னெடுத்து அவற்றைப் பிரசாரம் செய்வதை வன்மையாகக் கண்டிக்கின்றோம், 1981 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் சட்டம் மற்றும் 2023 ஆம் ஆண்டு 3 ஆம் இலக்கத் தேர்தல் செலவுகளை ஒழுங்குப்படுத்தல் சட்டம் வேண்டுமென்றே மீறப்பட்டுள்ளது.

அரச நிதியை முறைகேடான வகையில் பயன்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படுகின்றார். தேர்தல் சட்டத்துக்கு அமையச் செயற்படும் ஏனைய வேட்பாளர்களுக்கு இதனால் அநீதி இழைக்கப்படும். ஆகவே, இவ்விடயம் குறித்து அவதானம் செலுத்துமாறு வலியுறுத்துகின்றோம்." – என்றுள்ளது.

# இலங்கைக்கு வரக்கூடிய பாதிப்புகளை எதிர்கொள்ள மூன்று விசேட குழுக்களை நியமித்தார் ஜனாதிபதி!

ஈரானில் உள்ள ஹமாஸ் அமைப்பின் அரசியல் தலைவர் படுகொலையின் காரணமாக ஈரான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் உலக நாடுகளில் ஏற்படக்கூடிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார அழுத்தங்களை எதிர்கொள்வதற்கு முன் ஆயத்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 3 விசேட குழுக்களை நியமிதுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேசிய பாதுகாப்பு தொடர்பான விசேட குழுவொன்றும், பொருளாதாரத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்வதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருப்பதோடு அந்த இரண்டு குழுக்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கான உயர்மட்ட குழுவொன்றையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரின் அங்கத்துவத்துடன் இந்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொருளாதாரத்தின் மீதான தாக்கம் குறித்து ஆராய்வதற்கான



குழுவின் உறுப்பினர்களாக, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதி ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன ஆகியோர் செயற்படுவர்.

மேற்படி இரு குழுக்களையும் கண்காணிக்கும் உயர்மட்டக் குழுவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, வெளிவிவகார அமைச்சர் சட்டத்தரணி அலி சப்ரி, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோர் உள்ளடங்குவர்.

மேற்படி சம்பவத்தின் விளைவாக ஈரான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் உலகில் ஏற்படும் நிலைமைகளினால் இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்துக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டும் பட்சத்தில் செய்யப்பட வேண்டிய முன் ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்து உயர்மட்ட குழுவுக்கு அறிக்கையிடும் பொறுப்பு ஏனைய இரு குழுக்களையும் சார்ந்துள்ளது.

எரிபொருள் மற்றும் ஏனைய அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களை பெற்றுக்கொள்வதில் நாட்டு மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் பிரச்சினையைக் கையாளும் பொறுப்பையும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட இரண்டு குழுக்களிடமும் ஒப்படைத்துள்ளார்.

இரு குழுக்களும் சமர்ப்பிக்கும் அறிக்கையின் பிரகாரம் உயர்மட்டக் குழு உரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவின் செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# ஒன்பதாவது உலகத் தமிழ் பூப்பந்தாட்டத் தொடர் நேற்று யாழ்ப்பாணத்தில் வைபவ ரீதியாக ஆரம்பம்

ஒன்பதாவது உலக தமிழ் பூப்பந்தாட்டத் தொடர் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. யாழ்ப்பாண பல்கலைக்கழக உள்ளக அரங்கில் பூப்பந்தாட்டத் தொடருக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்துச் சிறப்பித்தார்.

12 நாடுகளைச் சேர்ந்த 514 வீர, வீராங்கனைகளின் பங்குபற்றுதலுடன் நேற்று ஆரம்பமாகியுள்ள ஒன்பதாவது உலக தமிழ் பூப்பந்தாட்டத் தொடரின் இறுதி போட்டிகள் எதிர்வரும் 04 ஆம் திகதி நடைபெறவுள்ளன. 33 பிரிவுகளின் கீழ் இந்தப் போட்டிகள் நடைபெறுவதுடன், சர்வதேச வீரர்களுக்கான பிரிவும் இம்முறை இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

ஒன்பதாவது உலக தமிழ் பூப்பந்தாட்டத்தொடரின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினருக்கான உரையை நிகழ்த்திய ஆளுநர் –

“உலகில் எந்த நாட்டில் வசிக்கின்ற போதிலும், சொந்த மண்ணை என்றும் மறவாதவர்களாக உலக தமிழ் பூப்பந்தாட்டப் பேரவையின் உறுப்பினர்கள் செயற்படுகின்றனர். தமது மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக அந்நியர்களின் மண்ணில் பல்வேறு சவால்களை அவர்கள் எதிர்நோக்கி வருகின்றனர். அவ்வாறான உதவிகளில் ஒன்றே இந்த பூப்பந்தாட்டப் பேரவையின் முயற்சி ஆகும். ஒரு தனி மனித முயற்சியின் பயனாக இன்று உலகளாவிய ரீதியில் இந்த பேரவை ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை பாராட்டிற்கு உரியதே.இந்த பேரவையின் ஸ்தாபகருக்கு வடக்கு மாகாண மக்கள் சார்பில், வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் கூறிக்கொள்கின்றேன். நல்லவற்றை ஏற்று, அவற்றை பாராட்டி கௌரவிக்க நாம் பழகிக்கொள்ள வேண்டும். அதனை அனைவரும் கற்றுக் கொள்ளவும் வேண்டும். இளைய சமூகத்திற்கும் அதனை கற்றுக்கொடுக்க வேண்டும். விளையாட்டை உடல் ரீதியான பயிற்சியாக மாத்திரம் அன்றி, உள ரீதியான பக்குவத்தை ஏற்படுத்தும் விடயமாக அதனை கருத வேண்டும். அத்துடன் தாய்நாட்டிற்காக உதவிகளை புரியும் புலம்பெயர் உறவுகளுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றிகளை கூறிக்கொள்கின்றேன்” எனதெரிவித்தார்.

















# ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவர் கொலைக்கு ரணில் கடும் கண்டனம்!

ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயில் ஹனியாவின் படுகொலையை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது எனவும், அதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமு ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், புதிய நோக்குடனும் புதிய வேலைத் திட்டத்துடனும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லவே தான் சுயேட்சை வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார் எனவும், மாகாண சபைகள், மத்திய அரசு உட்பட 10 நிர்வாகக் கட்டமைப்பின் ஊடாக நாட்டை அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதற்கு அர்ப்பணிப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தினார் சஜித்!

எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, சஜித் பிரேமதாஸ சார்பில் தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று முற்பகல் கட்டுப்பணம் செலுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் சுயாதீன வேட்பாளராகக் களமிறங்க கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க இவ்வாரம் கட்டுப்பணம் செலுத்தவுள்ளார்.

# புத்தளத்தில் இணைய வழி மோசடியில் ஈடுபட்ட 50 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் கைது!

புத்தளம் பிரதேசத்தில் இணைய வழி மோசடியில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் 50 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் 44 ஆண்களும் 9 பெண்களும் அடங்குவர்.

சந்தேகநபர்கள் புத்தளம், கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்து இந்த மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து 98 கையடக்கத் தொலைபேசிகள், 44 கணினிகள் மற்றும் பல சிம் அட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.



# யாழ். மாவட்டத்தில் முஸ்லிம்களிற்கான வீட்டுத் திட்டத்திற்கான நிதி கிடைத்தது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முஸ்லிம் மக்களின் வாழ்விடப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அமைக்க திட்ட மிடப்பட்டுள்ள தொடர் அடுக்கு மாடித் திட்டத்திற்கான நிதி அனுமதி மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

கைதடியில் உள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் கடந்த 23 ஆம் திகதி பிரதம செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் றிஷாட் பதியூதின், மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர், மாநகர சபை, பல்கலைக் கழக பொறியியல்பீடத்தினர், நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை உடபட பல திணைக்களத்தினரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மீளக் குடியமர்ந்து நிரந்தர வீடு அற்ற முஸ்லிம் மக்களிற்கு நிலத்தை பெறுவதில் உள்ள நெருக் கடியை போக்கும் வகையில் ஓர் தொடர் மாடி வீடு அமைத்து கொடுப்பது தொடர் பில் ஆராயப்பட்டது.

தொடர்மாடி அமைப்பதற்காக பொம் மைவெளிப் பகுதியில் முஸ்லிம்களால் கொள்வனவு செய்யப்பட்ட 70 பரப்புக் காணியில் அமைப்பது தொடர்பிலேயே அதன்போது ஆராயப்பட்டது.

இப்பகுதியில் காணப்பட்ட பள்ளம் 15 ஆண்டுகளிற்கு முன்பு மாநகர சபையால் குப்பை கொட்டியி நிரவியது. அதனால் அப் பகுதியில் கட்டிடம் அமைக்கும் தன்மை காணப்படுகின்றதா என யாழ்ப்பாணம் பல்கலைக் கழக பொறியியலப் பீடம் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இதேநேரம் அப் பிரதேத்தில் உள்ளக வீதிகள் அமைப்பு மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தநிலையில் இந்த திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் றிஷாட் பதியுதீனின் பரிந்து ரையில் 80 மில்லியன் ரூபா நிதி அனுமதி யாழ்ப்பாணம் மாவட்டச் செய லகத்திற்கு தற்போது கிடைத்துள் ளது.




# யாழில் ரம்பா குடும்பம்

தென்னிந்திய பிரபல நடிகை ரம்பா மீண்டும் யாழ்ப் பாணத்திற்கு நேற்றைய தினம் புதன்கிழமை வருகை தந்துள்ளார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக தனியார் விமானம் ஒன்றில் நேற்று மதியம் தனது குடும்பத்தினருடன் வருகை தந்துள்ளார்

ரம்பா குடும்பத்தினரினால் யாழ்ப்பாணத்தில் நடத்தப் படுகின்றன தனியார் பல்கலைக்கழகத்தின் ஓராண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்காகவும், ரம்பாவின் கணவரின் பிறந்தநாளை யாழ்ப்பாணத்தில் குடும்பத்தினருடன் இணைந்து கொண்டாடுவதற்காகவுமே யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார் எனத் தெரிவித்தார்.







# உலக தாய்ப் பால் தினம் இன்று!

- நடராஜன் மிருணாளினி

தாய்ப் பால் கொடுப்பது காலம் காலமாகப் பெண்கள் இயற்கையாகவே செய்து வந்த பணி. சமீப காலத்தில் தாய்ப் பால் அளிப்பது பெருமளவில் குறைந்து வருகிறது. தாய்ப் பாலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் தாய்ப் பால் தினம் கடைப்பிடிக் கப்படுகிறது.

தாய்ப் பாலில் அதிசயிக்கத்தக்க ஆற்றல் படைத்த ரசாயனப் பொருள் இருக்கிறது. அது பிறந்த குழந்தையின் செரிமான உறுப்புக்களை பாதுகாக்கவும் குறைகளைப் போக்கவும் பெரிதும் உதவுகிறது. தாதுப் பொருள் குழந்தை பிறந்தவுடன் சில நாள்களுக்குச் சுரக்கின்ற சீம்பாலில் அதிக அளவில் இருக்கிறது. இது குழந்தையின் குடல் பகுதிகளை மற்ற அமிலச் சுரப்பால் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்கிறது. குழந்தை இனிமேல் சாப்பிடப் போகும் உணவுகளை ஏற்றுக் கொள்ளும் விதமாகப் பக்குவப்படுத்துகிறது. ஆகவே எல்லாவித சத்துக்களும் அடங்கிய பால் குழந்தையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. தாய்ப்பால் பருகும் குழந்தைகள் நல்ல ஆரோக்கியத்துடன் வளர்வர். காரணம் தாய்ப் பாலில் உள்ள நோய் எதிர்ப்பு திறன்.

தாய்ப்பாலில் குழந்தைக்கு வேண்டிய அனைத்துச் சத்துப் பொருள்களும் சரியான விகிதத்தில் உள்ளன. மூளை வளர்ச்சி சரியாக அமைய மிகத் தேவையான புரதங்கள்,அத்தியாவசிய கொழுப்புச் சத்துகள் தாய்ப் பாலில் மட்டுமே உள்ளன. தாய்ப்பால் இயற்கையிலேயே சரியான நிலையில் உடனுக்குடன் புதிதாகக் கிடைக்கும் உணவு. உற்பத்தி செய்யப்படாத உணவுப் பொருள் என்பதால் எவ்வித மாசுக்கும் இடமில்லை. மாறாக கிருமிகளைக் கொல்லும் பொருள்களைத் தன்னகத்தே உடையது அதன் தனிச் சிறப்பாகும்.

தாய்ப்பாலில் உள்ள கொழுப்பு அமிலங்கள் மற்றும் சில பொருள்களின் அற்புதக் கலவை குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது. ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் மரணத்தைக் குறைக்க உலக நாடுகள் முனைந்து செயல்படுகின்றன. குழந்தை பிறந்த முதல் 2 ஆண்டுகள் உடல், மன, மூளை வளர்ச்சி அதிவேகமாக இருக்கும். இப்பருவத்தில் குழந்தையின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு ஏதேனும் தடை ஏற்பட்டால் வாழ்நாள் முழுதும் சீராக்க முடியாத பாதிப்பை ஏற்படுத்தும். வளர்ச்சிக்கு உறுதுணையாக தாய்ப்பால் அளிப்பது தாய்மார்களின் கடமை.

6 மாதங்களுக்காவது தாய் பாலூட்ட வேண்டுமென மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். பிறகு தாய் அல்லது குழந்தை ஆகிய இருவரில் ஒருவர் வேண்டாம் எனத் தீர்மானிக்கும் வரை குழந்தைக்குத் தாய்ப்பால் தேவை. தாய் தன் மார்போடணைத்துப் பாலூட்டுகையில் தொப்புள் கொடிக்குப் பிறகு மறுபடி ஒரு பிணைப்பு உடல் ரீதியாக ஏற்படுகிறது.

இயற்கையாகக் கிடைக்கக் கூடியது தாய்ப்பால். இதற்கு மாற்று எதுவுமே இல்லை. அதில் உள்ள வெண்மையான திரவப் பொருளே குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை அளிக்கிறது. இவை எல்லாவற்றையும் விட குழந்தைக்கும் தாய்க்கும் உளவியல் ரீதியாக ஒருபிணைப்பை ஏற்படுகிறது.

பெண்கள் தாய்மை அடையும் போது தான் முழு பெண்மையை அடைகின்றனர். தாய்மை பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதம். குழந்தை பிறந்ததுமே தாய்ப் பால் கொடுப்பது மிகவும் அவசியம். பிறந்த குழந்தைக்கு வழங்கப்படும் முதல் உணவு தாய்ப் பால் தான். தாய்ப் பாலில் குழந்தைக்குத் தேவையான அத்தனை சத்துக்களும் அடங்கி இருக்கிறது. தண்ணீர் கொழுப்பு புரதம் சர்க்கரை தாதுப் பொருள்கள் ஆகியவை தாய்ப் பாலில் காணப்படுகிறது. இரத்தத்தில் உள்ள குளுக் கோஸ், கல்சியம், விட்டமின்கள் ஆகியவற்றை மார்பகச் சிற்றறைகள் பிரித்து பாலாக மாற்றுகின்றது.

பிறந்த குழந்தைக்கு தேவைப்படும் போதெல்லாம் உடனடியாக, சுத்தமானதாக, சுகாதாரமாக, சரியான சீதோஜ்ண நிலையில் கிடைப்பது தாய்ப் பால். தாய்ப்

தொடர்ச்சி▼



# உலக தாய்ப் பால் தினம் இன்று!

தொடர்ச்சி▲

பாலில் தேவையான தண்ணீர், சத்து விட்டமின்கள், மலம் இளக்கி ஆகியன இருப்பதால் குழந்தைகளுக்கு வயிறு உபாதை தவிர்க்கப்படுகிறது. 4 மாதம் முதல் 5 மாதத்துக்குத் தாய்ப்பாலை விடச் சிறந்த உணவு கிடையாது. எந்தக் குழந்தை அப்படி வளர்கிறதோ, அந்தக் குழந்தை காது சம்பந்தப்பட்ட நோய்க் கிருமிகளில் இருந்தும், வயிற்றுப் போக்கிலிருந்தும் காப்பாற்றப் படுகிறது. நெடுங்காலப் பயன்கள் என்னவென்றால் தாய்ப்பால் அருந்தும் குழந்தைகள் ஆஷ்துமா, அலர்ஜி, குழந்தையிலேயே எடை பருமன், குழந்தைப் பருவப் புற்றுநோய் இவற்றின் அபாயத்திலிருந்து ஓரளவு தவிர்க்கப்படுகின்றன. 4 மாதத்திற்குத் தாய்ப்பால் அருந்தும் குழந்தை, குழந்தைப் பருவ நீரிழிவு வியாதியிலிருந்து காப்பாற்றப்படுகிறது. குறைமாதத்தில் பிறந்த குழந்தைகள் பின்னால் இரத்த அழுத்த நோயிலிருந்தும் காப்பாற்றப்படுகின்றன. தாயின் இரத்தத்தில் உள்ள ஆக்ஸிடோ சின் என்கின்ற ஹார்மோன் பாசத்தையும் பந்தத்தையும் வளர்க்கிறது. இத்தனை பலன்கள் இருக்கும் தாய்ப்பாலை குழந்தை பிறந்த ஒரு மணிநேரத்துக்குள்ளேயே கொடுப்பது நன்மை பயக்கும்.

இந்த அவசர உலகத்தில் குழந்தை பெற்றுக் கொள்வதென்பது பல்வேறு காரணிகளையும் சிந்தித்துத் தீர்மானிப்பதாக இருக்கிறது. அதில் குழந்தைப் பராமரிப்பும் ஒன்று. கடந்த காலங்களில் குழந்தைக்குத் தாய்ப்பால் இயல்பாக கிடைக்கும் உணவாக இருந்தது. இன்றைய காலகட்டத்தில் – அதிலும் குறிப்பாக பணிபுரியும் தாயாக இருப்பின், தாய்ப்பாலா அல்லது புட்டிப்பாலா என்று மனத்தில் ஒரு பட்டி மன்றம் போட்டு முடிவெடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறாள்.

ஐரோப்பாவில், இங்கிலாந்தில் தான் மிகக் குறைவாக தாய்ப் பாலூட்டுகின்றனர். அமெரிக்கா முழுவதும் தாய்ப் பாலூட்டுவதை ஊக்குவிக்க பல அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் பாடுபடுகின்றன. டெக்சாஷ் மாகாணத்தில் பாலூட்டுவதற்காக தாய்மார்களுக்கு வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டுமெனச் சட்டம் உள்ளது. உலக தொழிலாளர் நிறுவனமானது வேலை நாள்களில் பாலூட்டும் தாய்களுக்கு ஒரு முறையோ இரு முறையோ அரை மணி நேரம் பாலூட்டும் நேரமாக அங்கீகரித்துள்ளது.

பல இளந்தாய்மார் அலுவலகத்தில் பாலூட்ட சரியான இடம் இல்லாததால் நிறுத்தி விடுகின்றனர். மேல் நாடுகளில் அரசு சாராத தொண்டு நிறுவனங்கள், மகப்பேறடைந்த பெண்களுக்கு வசதிகள் செய்து தரும் பணியமர்த்துநர்களுக்கு பரிசு கொடுக்கிறது,

தாய்ப் பாலூட்டுவதைக் கணவன், குடும்பத்தினர், பணியமர்த்துநர் மற்றும் சமுதாயம் ஊக்குவிக்க வேண்டும். தாய், நினைத்த இடத்தில் குழந்தைக்குப் பாலூட்டுவதை, குழந்தையைப் பராமரிக்கும் எந்த ஒருசெயலைப் போலவே அங்கீகரிக்க வேண்டும். ஒரு சாதாரணப் பார்வை கூட அசௌகரிய உணர்வை ஏற்படுத்தக் கூடும். அதன் காரணமாக, தாய் பாலூட்டுவது தடைபடலாம்.

மேல்நாட்டில்தாய்ப்பால்வங்கிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரத்த தானத்தைப் போல தாய்ப் பால் தானமும் உயிர் காக்கும் செயலாகக் கருதப்படுகிறது. சேமிக்கப்பட்ட தாய்ப் பால் அநாதைக் குழந்தைகளுக்கும், எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் வழங்கப்படுகிறது. அமுதமான தாய்ப் பால் கொடுப்பதில் பின்பற்றப்படும் தவறான நடைமுறைகளும் உள்ளன. உதாரணமாக, தாய்ப்பால் புகட்டுவதைத் தாமதமாகத் தொடங்குகின்றனர். சிலர், தாய்ப் பால் அளித்தால் அழகு கெட்டுவிடும் என்ற தவறான எண்ணம் கொண்டிருக்கின்றனர். பாசத்தோடு புகட்டாமல் கடமைக்குச் செய்பவர்கள் உள்ளனர். பிறர் சொல் கேட்டு தாய்ப் பால் அளிப்பதை நிறுத்துகின்றனர்.

குழந்தைக்குத் தாய்ப் பால் எவ்வளவு முக்கியமோ, பாலூட்டும் செயலானது, தாய்க்கும் முக்கியமானது. தாய்ப் பால் ஊட்டாத பெண்களுக்கு மார்பு மற்றும் கர்ப்பப் பை புற்றுநோய் வரும் அபாயம் உள்ளது.

பாலூட்டும் தாய் அடுத்த கர்ப்பத்தைத் தள்ளிப்போடுகிறாள். ஒரு தாய் குழந்தைக்குப் பாலூட்டுவது என்பது அக்குழந்தையின் நலத்துக்காக மட்டுமல்ல. தனது குழந்தையை தானே போஷித்து வளர்ப்பதில் பெருமை அடைகிறாள். ஒரு நாள் பாலூட்டுவதில் குழந்தையின் இரத்த சர்க்கரை அளவு கட்டுப்படுகிறது. நோய் எதிர்க்கும் சக்தி கூடுகிறது. குழந்தையும் தாயும் சேர்ந்தே அளப்பரிய நன்மை பெறுகின்றனர்.

நம் கலாசாரத்தில் தாய்ப் பால் ஊட்டலுக்குத் தொன்று தொட்டே சரியான இடம் கொடுக்கப்பட்டுள்ளதை இலக்கியங்களில் இருந்தும் காவியங்களில் இருந்தும் அறியலாம். புட்டிப்பால் என்பது நாகரிக காலத்தின் இடைச் செருகலே. தாய் பாலை மட்டுமா ஊட்டுகிறாள்? பாலோடு வாஞ்சையையும் பாசத்தையும் மட்டுமல்ல. பண்பையும் சேர்த்தல்லவா ஊட்டுகிறாள்? எனவே நாமும் பெண்மையின் தாய்மையைப் போற்றுவோம். தாய்ப் பால் ஊட்டலை ஊக்குவிப்போம்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.08.2024




இன்று சாதகமான நாளாக அமையாது. உங்கள் நண்பர்கள் மற்றும் உடன் பணிபுரிவோர்களின் மறைமுகமான எதிர்ப்புகள் காணப்படும். உரையாடும் போது கவனம் தேவை.

உங்கள் பணிகளில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் சக பணியாளர்களின் தொல்லைகள் காணப்படும். கவனக் குறைவின் காரணமாக சில நல்ல வாய்ப்புகளை இழப்பீர்கள். இன்று நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இதனை தவிர்த்தல் நலம்.நிதி நிலைமை மோசமாக காணப்படும். உங்கள் தேவைகள் மற்றும் அதிகரிக்கும் செலவினங்களை எதிர்கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று வளர்ச்சிக்கு உகந்த நாள். இன்றைய நாளை சரியாக திட்டமிட்டால் நீங்கள்வெற்றி பெறலாம்.உங்கள் அணுகுமுறையில் இன்று உறுதியுடன் காணப்படுவீர்கள். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று நீங்கள் விரைந்து பணியாற்றுவீர்கள். உங்களிடம் காணப்படும் நம்பிக்கையை பணியில் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் துணைக்கென நேரம் ஒதுக்குவீர்கள். இது உங்கள் இருவருக்கும் இடையே உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும். உங்கள் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் உங்கள் சேமிப்பு உயரும்.




நீங்கள் வெளிப்படையாகவும் விஷயங்களை லேசாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.அனுசரனையான போக்கை மேற்கொள்ள வேண்டும். அமைதியாக இருங்கள். அனைத்தும் நல்லபடியாக நடக்கும்.

இன்று கவனமுடன் பணியாற்றுங்கள். கவனச் சிதறலுக்கு இடம் அளிக்காதீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் திணிக்காதீர்கள். அவருடைய உணர்வுக்கும் மதிப்பு கொடுப்பதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாக இருக்கலாம். அதிகப்படியான செலவுகள் கவலையை அளிக்கும். நீங்கள் சிறப்பாக சேமிக்க ஒரு திட்டத்தை அமைத்துப் பின்பற்ற வேண்டும்.




இன்று பொறுப்புகளும் பதட்டமும் காணப்படுவதால் பக்தியுடன் ஸ்லோகம் சொல்வதன் மூலம் நீங்கள் உங்கள் மனதை அமைதியாக வைத்துக் கொள்ள முடியும்.இசையை கேட்பதன் மூலமாகவும் உங்கள் மனதை பதட்டமின்றி வைத்துக் கொள்ள முடியும்.

சக பணியாளர்களிடம் நல்ல விதமாக நடந்து கொள்ளுங்கள். அவர்களை கவனமுடன் கையாளுங்கள்.

இன்று உங்கள் துணையிடம் மனம் திறந்து உணர்வுகளை பகிர்ந்து கொள்வது நல்லது. இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

உங்களிடம் குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவில் முதலீடு செய்யும் முடிவை தவிர்த்தல் நல்லது.




இன்று உற்சாகத்துடனும் ஆற்றலுடனும் இருக்க வேண்டும்.கவலைகளுக்கு இடம் அளிக்க வேண்டாம்.எப்பொழுதும் நல்லதையே நினைக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை முன்னுரிமைப்படுத்தி செயலாற்றுவதன் மூலம் பணியில் பின் தங்குவதை தவிர்க்கலாம்.

உங்கள் ஈகோவைத் தவிர்ப்பது நல்லது. நல்ல புரிந்துணர்வையும் அன்பையும் வெளிப்படுத்துவது உங்கள் உறவுக்கு நல்லது.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்துக்காகப் பணத்தைச் செலவு செய்வீர்கள். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. செரிமானக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களுக்கு சிறந்த பலன்கள் கிடைக்கும்.நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். பிறரிடம் உரையாடும் போது கவனித்து உரையாட வேண்டும்.

பணிகளில் திறமைகளை வெளிப்படுத்தி உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள். சிக்கலான பணிகளையும் கவனமாகவும் எளிதாகவும் கையாள்வீர்கள். இன்று உங்கள் வளர்ச்சி உறுதி.

உங்கள் துணையிடம் இனிமையான உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

அவநம்பிக்கை எண்ணங்களை தவிர்த்து விடுங்கள். இதனால் எப்பொழுதும் ஆரோக்கியமாக இருக்கலாம்.




இன்று புதிய தொடர்புகள் ஏற்படும். அவர்களின் ஆதரவு கிடைக்கும். இன்று முழுவதும் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். உங்கள் சாதனைகள் குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

நீங்கள் சிக்கலான பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியைத் தரும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிட்டும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வது நல்லது. இதனால் இருவரும் மகிழ்வுடன் இருக்க முடியம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வகையில் அது கிடைக்கப் பெறலாம்.




உங்களுக்கு சிறந்த பலன்கள் கிடைக்கும். ஆனால் மெதுவாகத் தான் கிடைக்கும்.உங்கள் கடின உழைப்பை மட்டுமே நீங்கள் நம்ப வேண்டும். முக்கியமான செயல்கள் செய்வதை இன்று தவிர்க்கவும்.

உங்கள் பணிகளை திட்டமிட்டு அதற்கேற்றாற் போல செயலாற்றுங்கள். இதன் மூலம் பணிகளை நல்ல தரத்துடன் உரிய நேரத்தில் முடிக்க இயலும்.

உங்கள் துணையுடன் சிரித்து பேசி பழகுங்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். உரையாடும் போது தெளிவாக பேசவும்.

பணத்தை மிகுந்த கவனமுடன் கையாளவும். அதுவும் குறிப்பாக பயணத்தின் போது கவனம் தேவை. குறைந்த அளவு பணமே எடுத்துச் செல்லவும். நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.08.2024


தனுசு

இன்று முழுவதும் நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். இன்று உங்கள் பொறுமை சோதிக்கப்படும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் கவனச் சிதறலுக்கு ஆளாகாதீர்கள். அதனால் தவறுகளை தவிர்க்க முடியும்.

இருவருக்கும் இடையிலான கருத்து வேற்றுமையை தவிர்க்கவும். மகிழ்ச்சியாக இருபதற்கு முயற்சி செய்யவும்.

உங்கள் செலவுகளை கண்காணிக்கவும். பணத்தை கவனமாக கையாளவும். எதிர்மறையான எண்ணங்களை தவிர்க்கவும்.

தோள்களில் வலி ஏற்படலாம். தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.


கும்பம்

வேறு எந்த நாளையும் விட இன்று நீங்கள் வெற்றி காண்பீர்கள். உங்கள் அணுகுமுறையில் உறுதி காணப்படும். சுய முன்னேற்றத்திற்காக பாடுபடுவீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். உங்கள் கடின உழைப்புக்குப் பலன் கிடைக்கும்.

இனிமையான பேச்சு மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். அவரை விரும்ப ஆரம்பிப்பீர்கள். இது அவருக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்களிடம் அதிக பணம் காணப்படும். வெளி நாட்டிலிருந்து பணம் கிடைப்பத ற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பாராமரிப்பீர்கள். ஆரோக்கியத்தை தக்க வைக்க சத்தான உணவை உண்ணவும்.


மகரம்

இன்று உங்களுக்கு சிறந்த நாள். உங்கள் நீண்ட நாள் ஆசை நிறைவேறும் நாள். இது உங்களுக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும். நீங்கள் மிகவும் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணிகள் பாராட்டைப் பெறும். இது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இருவருக்கும் இடையே நல்ல அன்பு மலரும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். அத்தியாவசியமான நோக்கங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். நன்றாக உண்டு உறங்குவதன் மூலம் சிறந்த ஆரோக்கியத்தை தக்க வைத்துக் கொள்ளலாம்.


மீனம்

விரைவான திடீர் முடிவுகளை இன்று எடுக்காதீர்கள். யோசித்து அதற்கேற்றாற் போல செயல்படவேண்டும். உங்கள் எண்ணத்திலும் செயலிலும் பக்குவம் தேவை.

பணியிடத்தில் தொழில் சார்ந்த அணுகுமுறை தேவை. எந்தவிதமான கவனச் சிதறலுக்கும் ஆளாகாதீர்கள்.

பாதுகாப்பற்ற உணர்வோடு உங்கள் துணையுடன் பழகாதீர்கள். இது உங்கள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பணத்தை கவனமாக கையாள வேண்டும். அதிகமாக சேமிக்க வேண்டும்.

முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும்.



